# சர்வவியாபி

SARVA VIABI

MISSION PRESS 1840
PONDICHERRY

ESTD:1.3.1907
(Year-115)

10-09-2023 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சோபகிருது வருடம் (ஆவணி 24) | வருட சந்தா ₹ 200 | தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 60 | இதழ் 37 | பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com | PH:0413/2334370 | ஆசிரியர்: அருட்திரு A.S.P.அகஸ்டின்


## அன்பிற்கான தாகம் - திருத்தந்தை



கடவுளே நீரே என் இறைவன் உம்மையே நான் நாடுகின்றேன் என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது நீரின்றி வறண்ட தரிசு நிலம்போல என் உடல் உமக்காக ஏங்குகின்றது, என்ற 63ஆம் திருப்பாடலின் துவக்க வரிகள் காட்டும் உன்னத மன்றாட்டு, நம் வாழ்க்கைப் பயணம் முழுவதும் தொடர்ந்து வருகிறது. நம் வாழ்வின் பாலைவன நேரங்களை கடந்து செல்லும் போது நாம் நம் பயணத்தில் தனியாக இல்லை என்ற நற்செய்தியைக் கேட்கிறோம். இன்று நாம் இந்த திருப்பாடல் வரிகள் காட்டும் இரு விடயங்களை சிறிது ஆழமாக நோக்குவோம். நமக்குள்ளிருக்கும் தாகம், மற்றும் அந்த தாகத்தைத் தணிக்கும் அன்பு என்பவையே அவை.

முதலில் நாம் நமக்குள்ளிருக்கும் தாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். தன் வாழ்வு பாலைவனமாகிப்போனதை உணரும் திருப்பாடல் ஆசிரியர், இறைவனை நோக்கி கூக்குரலிடுகிறார். இவ்வார்த்தைகள் மங்கோலியாவிலும் எதிரொலிப்பதைக் காணலாம். வரலாற்றிலும் கலாச்சாரத்திலும் வளமுடைய இந்த நாடு, வறட்சியான மேய்ச்சல் புல்வெளி நிலங்களையும் பாலை வனத்தையும் கொண்டுள்ளது. கடவுளின் நாடோடி இனமாக, திருப்பயணிகளாக நாம் மகிழ்வைத் தேடும் பாதையில் அன்பிற்கான தாகத்துடன் சென்று கொண்டிருக்கிறோம். திருப்பாடல் ஆசிரியர் எடுத்துரைக்கும் பாலைவனம் என்பது நம் வாழ்வே. நாமே அந்த வறண்ட நிலம். நாம்தான் ஆழமான தாகத்தைத் தணிக்க ஏங்கிக் கொண்டிருக்கிறோம். நம் இதயங்கள் மகிழ்வின் இரகசியத்தைக் கண்டுகொள்ள ஏங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த ஏக்கங்களுக்கான, தாகத்திற்கான பதிலுரையே நம் கிறிஸ்தவ விசுவாசம். இந்த தாகத்தில்தான் நம் மனிதகுலத்தின் உயரிய மறையுண்மை புதைந்து கிடக்கிறது. இந்தத் தாகமே நம் இதயங்களை அன்பின் கடவுளை நோக்கித் திறக்க வைக்கிறது. அவரே தன் குழந்தைகளாகிய நம்மை ஒருவருக்கொருவர் சகோதரர் சகோதரிகளாக மாற்ற வருகிறார்.

இதுதான் நம்மை இரண்டாவது விடயமான, தாகத்தைத் தணிக்கும் அன்பை நோக்கி அழைத்துவருகிறது. அன்பு என்னும் கடவுள் தன் மகன் இயேசு கிறிஸ்து வழியாக நம் அருகில் வந்து, நம் மகிழ்விற்கான ஏக்கத்திலும் தாகத்திலும், நம் கனவுகளிலும், நம் பணிகளிலும், நம் வாழ்விலும் பங்கெடுக்க ஆவல் கொள்கிறார். நாம் பலவேளைகளில் நம் வாழ்வை வறண்ட பாலைவனம் போல் உணர்கிறோம் என்பது உண்மையெனினும், இறைவன் எப்போதும் நம் அருகில் இருந்து நமக்கு புத்துணர்வு தரும் நீரை வழங்கி நம்மைப் புதுப்பிக்கிறார் என்பதும் உண்மையே. புனித அகுஸ்தீனார் கூறுவதுபோல், தாகத்தில் இருப்போரில் நாம் நம்மைக் கண்டுகொள்வோமானால், அந்த தாகத்தைத் தணிப்போரிலும் நாம் நம்மைக் காண்டுகொள்ளலாம்.

நம் ஆண்டவராம் இயேசுகிறிஸ்து, தன் வார்த்தைகளை எடுத்துரைக்கும் போதகர்கள் வழி ஆறுதலின் ஆதாரத்தை வழங்கியுள்ளார். வாழ்வின் பாலைவன நேரங்களிலும், இந்நாட்டில் சிறுபான்மை சமுதாயமாக இருப்பதில் தொடர்புடைய துன்பங்களிலும், நீங்கள் வாழ்வு தரும் நீரின்றி தவிக்கக்கூடாது என மறைப்பணியாளர்கள் மற்றும் மறைப்போதகர்கள் வழி உறுதிச் செய்துள்ளார். அவர்களே உங்கள் நடுவே மகிழ்வின் விதைகளைத் தூவியவர்கள். அந்த வார்த்தைகளே நம் விசுவாசத்தின் இதயத்திற்கு நம்மை மீண்டும் கொணர்கிறது. இதன் வழி நாம் கடவுளால் அன்புகூரப்பட அனுமதிப்பதுடன், நம் வாழ்வையும் அன்பின் கொடையாக மாற்றுகிறோம். ஏனெனில், அன்பு ஒன்றே நம் தாகத்தை உண்மையில் தணிக்க முடியும்.

இதைத்தான் இன்றைய திருப்பலி நற்செய்தி வாசகத்தில் புனித பேதுருவை நோக்கி இயேசு கூறுவதில் காண்கிறோம். துன்பப்படவும், கொலை செய்யப்படவும் இறைமகன் கையளிக்கப்படவிருக்கின்றார் என்பதைக் கேட்டதும் புனித பேதுரு, மெசியாவாக இருப்பவர் எப்படி கடவுளால் கைவிடப்பட்டவராக, சிலுவையில் ஒரு குற்றவாளியைப்போல் மரணமடைய முடியும் என எண்ணி, இது நடக்கக்கூடாது என இயேசுவிடம் கடிந்துகொள்கிறார். ஆனால் இயேசுவோ, பேதுருவை நோக்கி, "என் கண்முன் நில்லாதே சாத்தானே" என்று கூறுவதுடன், கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுவதாகவும் புனித பேதுருவை கடிந்துகொள்கிறார். நாமும் நம் வாழ்வில் வெற்றி, அதிகாரம், மற்றும் உலகப்பொருள்கள் வழியாக நம் தாகத்தைத் தணிக்கமுடியும் என எண்ணினோமானால், அது உலகைப்போல் எண்ணுவதாகும். அது நம்மை எங்கும் எடுத்துச் செல்லாதது மட்டுமல்ல, நம் தாகத்தை அதிகரிக்கவே உதவுகிறது. இதற்கு மாற்றாக, இயேசு காட்டும் வழியோ, தன்னலம் துறந்து நம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு அவரைப் பின்பற்றுவதாக இருக்கிறது. ஏனெனில், தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மாறாக, என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவார், என்பது இயேசுவே கூறும் வார்த்தைகள். அன்புகூருவதைத் தேர்ந்தெடுத்து, அன்பை பிறருக்கான இலவசக் கொடையாக மாற்றும்போது, அதே அன்பு அபரிவிதமாக நம்மிடமே திரும்பி வருவதுடன், நமக்கு முடிவற்ற மகிழ்வையும், இதய அமைதியையும், உள்மன சக்தியையும், ஆதரவையும் வழங்குகிறது.

இந்த உண்மையைத்தான் நாம் கண்டுகொள்ளவேண்டும் என இயேசு விரும்புகிறார். அதாவது, அன்பே நம் இதயத் தாகத்தை தணிக்கிறது, அன்பே நம் காயங்களைக் குணப்படுத்துகிறது, அன்பே உண்மை மகிழ்வைக் கொணர்கிறது. இதுதான் இயேசு நமக்குக் கற்பித்து நமக்கென திறந்துவிட்ட பாதை.

இயேசு நம்மிடம் எதிர்பார்ப்பதுபோல், அவரின் சீடர்களாக மாறி, அவரின் பாதச் சுவடுகளில் நடப்பதோடு, உலகம் செய்வதுபோல் எண்ணாமலும் இருப்போம். நாம் இவ்வாறு செய்தால், கிறிஸ்து மற்றும் தூய ஆவியாரின் துணையுடன் அன்பின் பாதையில் வழி நடப்போம்.

# ஆசிரியர் பேனா. கடவுளின் தீர்ப்பு - நீதி வழுவாதது.

ஊருக்கு வெளியே பாழடைந்த மண்டபம், இருள் சூழ்ந்த வேளை. அங்கு நான்கு பேர் அமர்ந்திருந்தனர். நால்வருமே பார்வையற்றவர்கள். பகல் நேரங்களில் ஊரில் இருக்கும் மக்கள் அவர்கள் மேல் பரிதாபப்பட்டு அவர்களுக்கு மதிய உணவு வழங்குவது வழக்கம். இரவு நேரங்கள் பெரும்பாலும் தண்ணீர் மட்டுமே. இரவு நிலவொளியில் அமர்ந்து ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர். நான்கு பேர் எங்கே கூடி பேசிக் கொள்கிறார்களோ எப்படியும் அது அரசிய-ல் போய் நிற்பது போல. இங்கேயும் அவர்கள் அரசனைப்பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

அன்று அரசன் கூட மாறுவேடத்தில் நகர்வலம் வந்தான். அவர்கள் பக்கம் வந்தபோது என்ன பேசிக் கொள்கிறார்கள் என நின்று கவனித்தான். தன்னைப் பற்றி பேசியதால் என்ன பேசுகிறார்கள் என ஒட்டுக் கேட்டான்.

குருடன் 1. நமது அரசன் இன்னும் சில நாட்களில் இறந்து விடுவான்.

குருடன் 2. அவன் பாம்பு கடித்துதான் சாவான்.

குருடன் 3. நாம்தான் அவனது பாடையை தூக்க வேண்டும்.

குருடன் 4. இதெல்லாம் நடக்காம-ருக்க அரசன் நமக்கு ஒரு நாள் நல்ல விருந்து கொடுக்க வேண்டும்.

அரசன் இதை எப்படி நம்புவது என்ற யோசனையுடன் அரண்மனை அடைந்தான். இரவு உணவு அருந்தவில்லை. ராணியிடம் சற்று கடுமையாக பேசினான். அவள் வற்புறுத்தி பால் அருந்த சொன்னாள். என்வென்று வினவினாள். அரசன் நடந்த நிகழ்வை அவளுக்கு விளக்க, அவள் சரி இதி-ருந்து உங்களை காத்துக்கொள்ள நல்ல பரிகாரம் உண்டு அல்லவா. அதை செய்யுங்கள்.

"நாளை நால்வரையும் நம் அரண்மனைக்கு அழைத்து வந்து நல்ல விருந்தளித்து, பரிசு கூட கொடுங்கள்" என்றாள் - "இப்பொழுது நிம்மதியாக உறங்குங்கள்" என்று ஆறுதல் சொன்னாள்.

சரி செய்து விடுவோம் என்று மன்னனின் மனது மட்டும் எதையோ சிந்தித்து கொண்டிருந்தது - அவனுக்கு உறக்கம் வரவில்லை.

பொழுது விடிந்தது... அரண்மனையி-ருந்து இரண்டு படைவீரர்கள் அந்த மண்டபம் நோக்கி விரைந்தனர். நான்கு குருடர்களையும் அழைத்துவர.

குருடர்கள் அரசன் தங்களை விருந்தளிக்க அழைக்கிறான் என்று அறிந்து மிக மகிழ்ச்சியாக நல்ல உடையணிந்து அரண்மனை நோக்கி புறப்பட்டார்கள்.

அரண்மனையை அடைந்து, அரசனை வணங்கி, அரசன் நீடுழி வாழ வாழ்த்தினர். அரசனும் ஒன்றும் அறியாதவன் போல நடித்துக்கொண்டு குருடர்களுக்கு விருந்து அளித்தான். எல்லோரும் நன்றாக உண்டார்கள். உணவருந்திக் கொண்டிருந்த குருடர்களில் ஒருவன் வயிற்றில் வ- எடுக்க அப்படியே வாயில் உணவோடு விழுந்து இறந்து போனான். அதை அறிந்த மற்ற குருடர்கள் மூவரும் சிரித்தார்கள். இப்பொழுது மற்றவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கிட்டதட்ட ஒரு மணி நேரத்திற்கு பின் இன்னொரு குருடர் வெளியே வந்து அங்கேயே விழுந்து இறந்து போனான். இந்த செய்தியை அறிந்து உணவே வாழ்வு என நினைத்து உண்டு கொண்டிருந்த இரண்டு குருடர்கள் மகிழ்ந்து சந்தோஷப்பட்டனர். கொஞ்ச நேரத்தில் அவர்களில் ஒருவனுக்கு விக்கல் வந்தது அதை கேட்ட மற்றவன் - "இது சாவில்தான் முடியும்" என மனதில் நினைத்தான். அதுவும் கொஞ்ச நேரத்தில் நடக்க, இப்பொழுது நான்காவது குருடன் அழ ஆரம்பித்தான். இப்பொழுது அரசன் அங்கு வந்து ஏன் அழுகிறாய் என வினவினான். இந்தக் குருடனுக்காவது மனிதாபிமானம் இருக்கிறதே என்று எண்ணி உன் நண்பர்கள் போனால் என்ன நான் இருக்கிறேன் என்றான்.

அதற்கு அந்த நான்காவது குருடன், மூன்று பேர் இறந்து விட்டார்கள் என்பதற்காக நான் அழவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் நானும் சாகப்போகிறேன் அதற்காகவும் நான் அழவில்லை.

"பின் எதற்காக அழுகிறாய்" என்று அரசன் கேட்க.

அதற்கு அந்த குருடனோ, "நான் செத்த பிறகு மீதி இருப்பதை யாராவது உண்பார்களே" என்று நினைக்கும் போது எனக்கு அழுமையாய் வருது என்றான்.

அரசன் அப்படியே ஷாக் ஆகி நின்றான்.

**"சுயநலவாதியால் ஒருபோதும் சுகமாக வாழ முடியாது."**

**காட்சி மாறுகிறது.** அன்று அந்த ஊரில், கன்னிப் பெண்கள் திருவிழா மாலை நேரம், வழக்கம் போல் பெண்கள் கைகளில் அகல்விளக்கு ஏந்தி ஆற்றங்கரைக்கு வந்தார்கள் அந்த அகல் விளக்குகளை, காய்ந்த இலைகளில் தோணி போல் செய்து அதில் வைத்து ஆற்றில் மிதக்கவிட. ஆற்றங் கரையோரம் ஒரு குடிசை, அன்றுதான் அந்த குடிசையில் அடுப்பு புகைந்தது.

உணவைச் சமைத்து முடிப்பதற்குள் பொழுது சாய இருள் வந்து கவ்விக்கொண்டது. உணவை உண்ண கொஞ்சம் விளக்கு இருந்தால் நலமாக இருக்குமென அந்த வீட்டில் இருந்தவர்கள் நினைத்தார்கள். விளக்குக்கு எங்கே செல்வது குடிசைக்கு வெளியே பெண்கள் விளக்குகளோடு செல்வது கண்டு அவர்களிடம் தங்களுக்கு ஓரிரு விளக்குகள் தரும்படி வேண்டினர்.

முதல் பெண்: நான் விளக்கை கொடுக்க மாட்டேன். கொடுத்துவிட்டு வெறுங்கையோடு நின்றால் மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று சொல்-விட்டாள்.

இரண்டாவது பெண்: இது கடவுளுக்குரிய விளக்கு. மனிதர்களுக்கு கொடுக்க மாட்டேன் என்று தீர்க்கமாக சொல்-விட்டாள். எல்லா விளக்குகளும் ஆற்றிலேயே மிதந்துக் கொண்டிருந்தன. யாருக்கு என்ன பயன்? இந்த வீடு இருளடைந்து கிடக்கிறதே! வங்க கவிஞர் ரபீந்தரநாத் தாகூர் சொன்ன கதை.

இன்று இந்தியாவில் எரியும் விளக்குகளுக்கு குறைவில்லை! ஆனால் அவை எரிய வேண்டிய இடத்தில் எரிந்து கொண்டிருக்கின்றனவா? எரிவதும், எரிய வைப்பதும் இன்றைய சுயநலவாதிகளின் செயல்பாடுகள். பிரச்சனைகளை உருவாக்குவதும், அதை வளரவிட்டு, எரிகின்ற தீயில் குளிர்காய்வதும், ஒரு குறிப்பிட்ட சாராரின் அடிப்படைவாத கொள்கையாய் இருக்கிறது.

தாங்களும் தங்களை சார்ந்த பெரிய நிறுவன முதலாளிகளும் வாழ, வளர, நாட்டு மக்கள் வாழ்வாதரமிழந்து, உயர் வரி செலுத்தி உடமைகளை இழக்கும் நிலை வந்ததற்கு ஆட்சியாளர்களின் சுயநலமே காரணம். அரசனின் சமயோஜித புத்தியும், பெண்களின் சடங்கு ஆச்சாரமும் கலந்த ஒரு கலவைதான் இன்றைய அரசு இயந்திரம். நாட்டு மக்களை உதாசீனப்படுத்தும் எந்த அரசனும் நிரந்தரமாக வாழ்ந்ததாக வரலாறு இல்லை. எனவேதான் வரலாறுகள் திருத்தப் படுகின்றன. மாற்றி எழுதப்படுகின்றன. எது எப்படியானாலும் கடவுளின் தீர்ப்பு நீதி வழுவாதது.

**- அஸ்பா -**



17-09-2023

# மன்னிப்போம்



அருள்திரு. A. தெய்வநாயகம்
பங்குதந்தை, கிருஷ்ணன்குப்பம்.

தவறு செய்வது மனித இயல்பு. மன்னிப்பது இறை இயல்பின் வெளிப்பாடு. இயேசுவின் பிரியமானவர்களே. இன்றைய இறை வார்த்தையின் வழியாக நாம் ஒவ்வொருவரும் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட மன்னிப்பை பிறரோடு பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். "மன்னிக்க மறுத்த பணியாள் உவமை" வழியாக இயேசு புரட்சிகரமான கருத்தை முன்னிறுத்து கிறார். மன்னித்தல் -பழிக்குப் பழி என்று பழைய ஏற்பாட்டு சட்டத்தை அறவே மாற்றி, மன்னிப்பு என்று மாண்புமிக்கு புதிய சட்டத்தை இயேசு தந்திருப்பதை மலைப்பொழிவு ஏற்கனவே வலியுறுத்திற்று அதே மன்னிப்பு, இன்னும் ஆழ்ந்த விதமாக திருச்சபைக்கு தேவை என்பது இங்கே அடித்து சொல்லப்படுகிறது. ஏழு முறை மட்டுமல்ல, எழுபது தடவை ஏழு முறை எனக் கூறி, மன்னிப்பின் அடிப்படைத் தன்மையே அளவற்ற இரக்கம் காட்டுவது என இயேசு வலியுறுத்துகிறார்.

"ஏழு முறை பழிக்குப்பழி" என்று ஒரு பழைய ஏற்பாட்டின் சிந்தனை தான், காலப்போக்கில் ஏழு முறை மன்னித்தல் என்று மாற்றம் பெற்றது. (ஆண்டவர் அவனிடம் "அப்படியன்று காயினைக் கொல்கின்ற எவனும் ஏழு முறை பழி வாங்கப் படுவான்" என்று சொல்லி, காயினைக் கண்டு பிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன் மேல் ஓர் அடையாளம் இட்டார்.

தொடக்க நூல் 4:15). ஆனால் இதையும் தாண்டி விடுகிறது இயேசுவின் அறநெறி. மன்னிக்க மறுத்த பணியாளர் தான் பெற்ற மன்னிப்பையும் இழக்கிறார். எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல, எங்கள் குற்றங்களையும் மன்னியும் என்று இயேசு கற்பித்த செபத்தின் விண்ணப்பத்திற்கு இந்து உவமை சரியான விளக்கமாக அமைகிறது. நம் மத்தியிலே நிலவ வேண்டிய மன்னிப்பு அதன் மாண்பு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இயேசு விளக்குகிறார்.

மூன்று படிநிலைகளை எந்த உவமையிலே நாம் காண்கிறோம்.

**I. அரசன் - பணியாளர்.**

அரசனிடமிருந்து 10,000 தாலந்து கடன் பெற்ற இந்த பணியாளன் வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் அவனால் திருப்பி செலுத்த முடியாது மிகப்பெரிய தொகை ஆகும். 10,000 தாலந்துகள் என்பது ஒரு பெரிய தொகை. ஏரோது தம் பகுதியில் வரி வசூலிக்கும் தொகையே வருடத்திற்கு 900 தாலந்துகள் ஆகும். பத்தாயிரம் தாலந்துகள் என்பது அண்டை பகுதிகளான சிரியா, பினிசியா, யூதேயா சமாரியா ஆகியவை களின் வரி தொகையை கூட்டினாலும் சரி வராது. இந்த கடன் தொகை என்பது திருப்ப முடியாத மிகப்பெரிய ஒரு தொகை. இயேசு சுட்டிக் காட்ட விரும்புவது அரசனின் மன்னிப்பை. எத்தகைய நிலையிலும் மன்னிப்பை முதன்மைப்படுத்தி இயேசு பேசுகிறார். கடவுளின் அளவற்ற இரக்கத்தையும் அரசன் வழியாக நமக்கு எடுத்துரைக்கிறார்.

**2. இரண்டு பணியாளர்கள்**

பத்தாயிரம் தாலந்து கடன் விலக்கு பெற்ற பணியாளன், தன்னிடம் 100 தெனாரியம் கடன் பட்ட உடன் பணியாளனை கடுமையாக வதைப்பதை பார்க்கிறோம். மன்னிப்பை பெற்ற இந்த பணியாளன் தன் உடன் பணியாளனை மன்னிக்க மறுக்கிறான். தான் பெற்ற மன்னிப்பிற்கு எதிராக நடந்து கொள்கிறான்.

**3. அரசனின் செயல்பாடு**

மன்னிப்பை பெற்ற பணியாளன் உடன் பணியாளனை மன்னிக்க மறுத்த செய்தியை கேட்ட அரசன், மிகவும் சினமுற்று தான் விலக்கு அளித்த கடனை முழுவதும் கட்ட ஆணை யிடுகிறான். தான் கொடுத்த மன்னிப்பை திரும்பப் பெற்றுக் கொள்கிறான். மன்னிப்பை பெற்ற பணியாளனோ கடனையும் சுமக்கிறான், மன்னிப்பை இழக்கிறான், இருளில் தள்ளப்படுகிறான்.

**பேதுரு வழியாக**

தூய பேதுருவின் வழியாக இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் அன்பு செய்தியாக மன்னிப்பு இருக்கிறது. ஏழு முறை மட்டுமல்ல அளவில்லாமல் தொடர்ந்து மன்னிக்க வேண்டும் என்பதையே இயேசு நமது வாழ்வில் விரும்புகிறார். மன்னிப்பை பற்றி பேசுவது எளிது வாழ்க்கையில் செயல்படுத்துவது கடினம் என்று நமக்குத் தோன்றும். ஆனால் மன்னிப்பு கேட்போம், மன்னிப்பை பரிசாக தருவோம். மன்னிப்பின் மாண்பை உணர்ந்து அதன் மகிழ்வில் நாம் நிலைத்திருப்போம்.



# எளிய அன்னை தெரேசா

– சுவாமி ஆ. லூயிஸ்.



அயல்நாட்டி-ருந்து, நமது நாட்டிற்கு வந்து ஒருபுரட்சிகரமான இறைவாக்கினராக விளங்கியவர்தான் புனித அன்னை தெரேசா. அவருடைய வாழ்வு, பணி என்ற இரண்டும்தான் ஏழைகளுக்காக இருந்தது, அவர்களின் சொத்து ஏழைகள்தான் என்பதை அனைவரும், குறிப்பாக துறவற சபைகள் உணர்ந்து உடன்பட்டு வாழ்வது மிகவும் முக்கியம். துறவிகளின் உடமை எல்லாவற்றை யும் பொதுநிலையினர் கண்காணிப் பார்கள். துறவிகள் எளிய வீட்டில் வாழ்ந்து பணிபுரிந்தால்போதும். துறவிகளின் இல்லம் இயேசுவின் இதயம், இறைவனின் இல்லம். இத்தகையப் புரட்சியைத்தான் புனித அன்னை தெரேசா நமக்கு விட்டு சென்றுள்ளார்.

**எளிய வாழ்வு:** எளியோர்தான் எளியோருடன் உணர, உரையாட, உறவாட இயலும். வசதி உள்ளவர்கள் ஏழைகளோடு உணர இயலாது. இயேசு எளியவராக எளியவர்களோடு வாழ்ந்து நமக்கு வழிகாட்டி வருகிறார். புனித அன்னை தெரேசா இயேசுவைப் போல எளிய வாழ்வு வாழ்ந்தார். அன்னை தெரேசாவிடம் இருந்தது இரு உடுப்புகள்தான் என்பது வியப்பாகும்.

**எளிய உணவு:** இன்று உணவு என்றால் பொதுவாக எல்லாரும் மிகவும் ஆசைப்பட்டு விதம்விதமாக உண்ண விரும்புகின்றனர். திருமணம் போன்ற நிகழ்வுகளில் நாம் இதைக் கண்டு வருகிறோம். எவ்வளவு உணவு வீணாக்கப்படுகிறது என்பதை நாம் காணும்போது கலங்கவேண்டும். இயற்கை உணவே மேலானது. கறிபோன்ற காரியங்களோடு போதைப் பொருளைக் குடித்து மகிழ்ந்து, கவலையில்தான் நிறைவடையும்.

**ஏழைகளோடு இரு:** அன்றும் இன்றும் இருப்பவர், இல்லாதவர், கற்றவர், கல்லாதவர், ஏழைகள், பணக்காரர்கள் என்ற வேறுபாடு விரித்துக்கொண்டு செல்கிறது. எல்லாரும் இறைவனின் மக்கள்தான், பகிர்ந்துண்டு பல் உயிர் ஓம்புக என்பது பழைய மொழிதான், இன்று அன்றாட வாழ்வுக்கு வருவதில்லை. ஏழையாய் இருந்தால் நோய் நொடி வருவதற்கு வாய்ப்பில்லை. உணவு முடிந்தபின் இன்னொரு உணவுக்கு வயிற்றில் இடம் இருக்க வேண்டும். வயிற்றில் ஒருபாகம் உணவு, ஒரு பாகம் நீர், ஒரு பாகம் காற்று என்று இருப்பதே நெறியாகும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பதை மறவோம்.



**இறைவனே புகலிடம்:** இறைவா எனக்கு நீர்தான் வேண்டும், வேறு எதுவும் எனக்கு வேண்டாம் என்ற பல்லவி ஒதித்துக் கொண்டே இருந்தால் மிகவும் நல்லது. கடவுளை விஞ்சுவது ஒன்றுமில்லை, ஒருவருமில்லை. இருப்பினும் அலகை கர்ச்சிக்கும் சிங்கம் போல, யார்மீது பாய்ந்துவிழ முடியும் என்று காத்துக் கொண்டிருக்கிறது.

இறைவனுக்கு முதலிடம் கொடுப்போம், ஏனெனில் நாம் அனைவரும் அவரது சாயலாகப் படைக்கப்பட்டு, மீட்கப்பட்டு, புனிதப்படுத்தப்பட்டு வருகிறோம். சோதனைமேல் சோதனை போது மடாசாமி, சோதனைத்தான் வாழ்க்கை என்றால், தாங்காது பூமி என்பதை உணர்ந்து இறைவனோடு இருப்போம், உலகப்பற்றினை மேற்கொள்வோம். அவரோடு இருப்பதே இன்பமாகும். கடவுள், இயேசு, ஆவி மூவரையும் ஒருவராக உள்ளத்தில் உயிரில் ஒன்றிணைவோம்.


## மிஷன் அச்சகத்தில் கிடைக்கும் புத்தகங்கள், புதுச்சேரி - 605001

**வணக்கமாதங்கள்**

| | | |
|---|---|---|
| இயேசுவின் திரு இருதய வணக்க மாதம் | — | 100.00 |
| உத்திரிக்கிற ஆத்துமாக்களின் வணக்க மாதம் | — | 100.00 |
| புனித கன்னி மரியாயின் வணக்க மாதம் | — | 100.00 |
| புனித சூசையப்பர் வணக்க மாதம் | — | 100.00 |
| புனித அந்தோனியார் வணக்க மாதம் (அச்சில்) | — | 80.00 |
| புனித ஜெபமாலை மாதா வணக்க மாதம் | — | 100.00 |

**புதுமைகள்**

| | | |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை, திங்கள், செவ்வாய், புதன், வியாழன் புதுமைகள் | | 80.00 |
| வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை புதுமைகள் (புதிய பதிப்பு) | | 100.00 |
| இறைவனின் அன்னையின் அற்புதமான வரலாறு – **எடுத்து வாசி** (பாகம் : 1, 2, 3, 4) | --- | 570.00 |
| வெரோணிக்காவின் கைகுட்டை | --- | 50.00 |
| உத்தரிக்கிற ஆன்மாக்களோடு எனது அனுபவங்கள் | --- | 100.00 |
| புதுநன்மை சான்றிதழ் (கலரில்) ஆண்-பெண் | --- | 10.00 |
| உறுதிபூசுதல் சான்றிதழ் (கலரில்) | --- | 10.00 |
| திருமண சான்றிதழ் (கலரில்) | --- | 10.00 |
| சின்ன குறிப்பிடம் | --- | 10.00 |
| பக்தி மலர் | --- | 30.00 |
| இளம் உள்ளங்களுக்கு | --- | 80.00 |

தபால் செலவு தனி



## 52 ஒரு குரு தன் சகோதர குருக்களுக்கு...

### அருட்பணி பியர் கையே MEP

தமிழாக்கம் **Dr.Sr.M.லில்லி மரி** ME, புதுச்சேரி.

விவிலியம் மட்டும் நமக்கு உபயோகமான நூல் அல்ல. வேறு தேவையான ஆன்மிக நூல்களும் உண்டு. திருவிவிலியத்தில் கடவுளுடைய கட்டளைகளையும், விதி முறைகளையும், ஆலோசனைகளையும் காண்கிறோம். எது அவருக்கு மகிழ்ச்சி அளிக்கிறது? எது அவருடைய தெய்வீக மகத்துவத்துக்கு இழுக்கு வருவிக்கிறது என்றும் பார்ப்போம். அவர் எப்படி தீமையைத் தண்டித்துப் புண்ணியத்துக்குச் சன்மானம் அளிக்கிறார் என்றும் காண்போம். தவ வாழ்வு பற்றிய நூல்களில் எவ்வாறு புனிதர்கள் கடவுளின் கட்டளைகளைப் புரிந்துகொண்டார்கள் என்றும், கடைபிடித்தார்கள் என்றும் காண்போம்.

அறியாமை என்பது விரும்ப வேண்டிய ஒன்று அல்ல. ஒருவர் புனிதத்தை விரும்ப முதலில் அது என்ன என்று அறிய வேண்டும். அதை அன்பு செய்ய அதன் அழகையும் மேன்மையையும் பற்றி நமக்குச் சொல்லப்பட வேண்டும். அதைக் கடைபிடிக்க என்ன செய்ய வேண்டும், எங்கிருந்து தொடங்க வேண்டும், எப்படித் தொடர வேண்டும், எங்கே நிறுத்த வேண்டும் என்றும் நாம் அறிந்திருக்க வேண்டும். கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளையும், வரும் தடைகளைத் தவிர்க்கவும் அறிய வேண்டும். தவ வாழ்வு பற்றிய நூல்களில் மட்டுமே இவை அனைத்தையும் காண முடியும், வேறு எதிலும் இல்லை.

மேலும் நமது பலவீனங்களையும் குறைகளையும் கண்டு மனந்தளராமலும், துன்பங்களைக் கண்டு அஞ்சாமல் இருக்கவும் அவற்றை மேற்கொள்ள நாம் இருக்கும் சூழ்நிலைகளில் அவர்கள் இருக்கும் போது புனிதர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்றும் காணலாம்.

நம்மைப்போலவே பலவீனர்களாகவும், சோதனைக்குட் பட்டவர்களாகவும், நாம் உருவாக்கப்பட்ட களிமண்ணாலும் ஆனவர்கள் என்பதைக் காண்பதைவிட வேறு அதிக ஆறுதலானது இல்லை. அவர்கள் புனிதத்தின் படியில் ஏறி வான் வீட்டை அடைந்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் நம்மைத் தவிர தங்கள் கரங்களை நீட்டித் தங்கள் செபங்களால் நம்மைத் தூக்கி எடுக்க எப்போதும் தயாராக இருக்கிறார்கள்.

முன்மாதிரிகள் நம்மை வழி நடத்துகின்றன. தங்களுடைய போராட்டங்களிலும் வெற்றிகளிலும் ஒருவர் புனித அகுஸ்தீனாரைப் பின்பற்றி இவ்வாறு கூற முடியும்: “என்னால் முடியாததைச் செய்ய எனக்குக் கடவுள் வலிமை தரமாட்டாரா?

இவையெல்லாம் புனிதர்களின் வரலாற்றில் அன்றி வேறு எங்கும் கிடைக்காது. எனவே ஞான வாசகம் தேவையாகிறது. இதைத்தான் எல்லாத் துறவற சபைநிறுவுனர்களும் நன்கு புரிந்திருந்தார்கள். எல்லா சட்ட நூல்களிலும் வழிகாட்டவும், புனிதத்துக்காகவும் கட்டாயப் பயிற்சியாக ஞான வாசகத்தை வைத்துள்ளார்கள். இதே ஒழுங்கு குருமடங்களிலும் அன்றாட கால அட்டவணையில் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. உலக முழுவதிலும் எந்த ஆர்வமுள்ள குருவும் இதைச் சரிவரக் கடைபிடிக்காமல் இருக்க மாட்டார். இந்தப் புனிதப் பயிற்சியைக் கைவிட்டவர்கள் தவறாது தளர்ச்சியை அடைவார்கள், அதுவே அவர்களுடைய அக்கறையற்ற வாழ்க்கைக்கு அடையாளமகும்.



Fr.Gayet

நம்மில் யார் ஞானவாசகத்தால் ஆதாயம் அடையாதவர்கள்? நம்மில் எத்தனை பேர் தங்கள் இளமையில் ஒரு வாசகத்தின் காரணமாக அழைத்தல் கிடைத்ததாகக் கூறுவார்கள்? மேலும் அதே காரணத்தால் தங்கள் அழைத்தலில் நிலைத்து நின்றதாகவும் கூறுவார்கள் அல்லவா?

நல்ல ஞான வாசகங்களால்தான் உலகுக்குப் புனித அகுஸ்தீனார், புனித லொயோலா இஞ்ஞாசியார் போன்றவர்கள் கிடைத்தார்கள் அல்லவா? வணக்கத்துக்குரிய கொலோம்பினோ தனக்குக் குறித்த நேரத்தில் உணவு கிடைக்கவில்லை என்றால் பொறுமை இழந்துவிடுவார். அவருடைய மனைவி “காத்திருக்கும் நேரத்தில் எதையாவது வாசியுங்கள்” என்று சொன்னார். அவருடைய மேசை மீது இருந்த தவ வாழ்வு பற்றிய நூலை எடுத்து வாசித்தார். அது அவரை மனம் மாற்றியது. பெரிய புனிதராக்கியது. புனித சுவாமிநாதர் தன் ஞான நூல்களை முத்தமிட்டு மார்போடு அணைத்துக்கொண்டு சொல்வாராம்: “இந்த நூல்கள் என் ஆன்மாவுக்கு ஊக்கமளிக்கும் பாலைத் தருகின்றன”.

ஞான வாசகம் எல்லாக் குருக்களுக்கும் மறைப்பணியாளர்களுக்கும் மிகவும் பயனுள்ளதும், மிகவும் தேவையானதுமாகும். இது அவர்களுக்கு வாழ்வுக்கும் இறப்புக்கான ஒரு கேள்வி.

கத்தோலிக்க நாடுகளில் பல குருக்கள் கூட்டாக வாழ்கிறார்கள். அவர்கள் ஒருவர் மற்றவர்க்கு வழிநடத்துபவர்களக இருக்கிறார்கள். ஒருவர் மற்றவர்க்கு உதவி செய்து ஊக்கமளிக்கிறார்கள். அவர்களுடைய உரையாடல்கள் எப்போதும் புனித அகுஸ்தீனார், அவருடைய தாய் புனித மோனிக்கா பற்றியதாக இருந்து அவர்களை வழிநடத்தும். அவர்கள் தொடர்ந்து நன்கு வாசித்துக் கற்றவர்கள் மத்தியில் இருக்கிறார்கள். அது அவர்களுக்குத் தொடர் பாடமாகவும் முன்மாதிரியாகவும் இருக்கும். இப்படிப்பட்டச் சூழ்நிலையில் ஒருவர் தன் ஆர்வத்தை இழப்பதும், தன் அழைத்தலை இழப்பதும் முடியாத காரியம்.

மாறாக நம் காரியம் மிகவும் வித்தியாசமானது. தலைமை அதிகாரிகளின் பார்வைக்கு மிகவும் தொலைவில் உள்ளோம். நம் உடன் குருக்களுக்கும் தொலைவில் உள்ளோம். வெளி உறுதுணை எதுவுமின்றி, ஆலோசனைகளும் இன்றி, நம் சொந்த முயற்சிக்கே விடப்படுகிறோம். சகோதர திருத்தலும் இல்லை. பிற சமயத்தவர் மத்தியில் வாழ்கிறோம். அவர்களில் பலருக்குப் பொன் கன்று குட்டியைத் தவிர வேறு கடவுள் இல்லை. அவர்களுடைய முக்கிய கவனம் தங்கள் ஆசைகளை நிறைவு செய்யவும் சுய திருப்தியையும், தங்கள் புலன் இன்பங்களையும் தேடுவதிலும் குறிக்கோளாக இருக்கிறது. அவர்களுக்குப் புண்ணியம் என்பது பெயரளவில் தான். பொய், வெளி வேடம், தவறான சாட்சியங்கள், அவர்களுடைய அசுத்தமே வெறும்அற்பப் பாவமாக உள்ளது.

➡ தொடரும்...



# விடுவிக்கக் கொடுக்கப்பட்ட விலை

***சகோ. அ. ஆரோக்கியதாஸ்,*** திண்டிவனம்.

தொடர்ச்சி....

அந்த தூய்மைக்கான வழியை எடுத்துச் சொல்லவும், வாழ்ந்து காட்டவுமே இயேசு உலகில் வாழ்ந்தார். தூய்மைக்கு விரோதமான குற்றங்களை பாவங்களை மனிதர்கள் நாம் எவ்வாறு செய்கிறோம் என்று கூறி, அதிலிருந்து உலக வாழ்வின் முடிவில், இறப்பிற்கு பிறகு தூய்மையில் தந்தை கடவுளோடு நீடித்த நிலையான பேரின்ப வாழ்வில் அவரோடு ஒன்றித்து இணைந்து வாழ வேண்டும். ஆன்மாவின் தூய்மை மிகமிக அவசியம் என்பதை வலியுறுத்தினார். தூய்மையை நாட வேண்டும். தூய்மையின்றி எவரும் கடவுளைக் காணமாட்டார். தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர் என்றுள்ளது.

**இயேசுவின் போதனை:** பழைய ஏற்பாட்டில் மீட்பரின் வருகைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட யூத மக்களை வழிநடத்த கடவுளால் அனுப்பப்பட்ட தலைவர்கள். இறைவாக்கினர்கள் தூய்மையான வாழ்வுக்கு வழிகாட்டியும், ஏற்க மறுத்து கொல்லப்பட்டனர். இறுதியாக அனுப்பப்பட்டவர். இறைதந்தையின் ஒரே மகனான இயேசு கிறிஸ்து அப்பவீடு எனப்பட்ட பெத்லகேமில் ஏழையாக மாட்டுத் தொழுவத்தில் பிறந்து தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்ட குழந்தை இயேசுவை பாமர மக்களை அப்பகுதி இடையர்கள். மற்றும் விண்மீன் வழிநடத்தி வந்த மூன்று ஞானிகள் மீட்பராக கண்டுகொண்டார்கள். நாசரேத்தூரில் முப்பது ஆண்டுகள் ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார். யோர்தான் ஆற்றில் திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்று தண்ணீரைவிட்டு வெளியேறிய போது, கடவுளின் ஆவி புறா இறங்குவது போல அவர் மீது இறங்கிவர. "என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து குரல் கேட்டது. திருமுழுக்கு யோவானும் இயேசுவைக் குறித்து சாட்சி சொன்னார். இவர்தான் கடவுளின் ஆட்டுக்குட்டி, இவரே தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பார் என்று சான்று பகர்ந்தார். கடவுள் நாசரேத்து இயேசுவின் மேல் தூய ஆவியாரின் வல்லமையை பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார்.

**பாவம் குறித்து விளக்கம்:** யோவான் 15:22 "நான் வந்து அவர்களிடம் பேசியிராவிட்டால் அவர்களுக்குப் பாவம் இராது. ஆனால் இப்போது அவர்கள் தங்கள் பாவங்களுக்குச் சாக்குபோக்குச் சொல்ல வழியில்லை" என்கிறார். இயேசு. மனிதர்களிடம் "வழியும் உண்மையும், வாழ்வும்,நானே. என் வழிாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. நான் உங்களுக்குக் கூறியவற்றை நானாக கூறவில்லை. என்னுள் இருந்துக்கொண்டு செயலாற்றுபவர் தந்தையே".

"நான் தந்தையுள் இருக்கிறேன். தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள், என் வார்த்தையின் பொருட்டு நம்பாவிட்டால் என் செயல்களின் பொருட்டாவது நம்புங்கள். நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வர். அவற்றைவிடப் பெரிய வற்றையும் செய்வார்" என்கிறார்.

➡ தொடரும்...

## அருளாளர்களாக அறிவிக்கப்பட உள்ள உல்மா குடும்பம்

தாயின் வயிற்றில் இருந்த குழந்தை உட்பட, உல்மா குடும்பத்தில் மறைசாட்சியாக இறந்த அனைவரும் திருவழிபாட்டு மகிமையில் உயர்த்தப்பட இருக்கின்றனர்.

யூதர்களுக்கு உதவி அவர்களை ஜெர்மன் படைகளிடமிருந்து காப்பற்றியதற்காக உல்மா குடும்பத்தார் அனைவரும் கொல்லப்பட்டதையடுத்து, வரும் செப்டம்பர் மாதம் அக்குடும்பத்தில் மறைச்சாட்சிகளாக மரித்த அனைவரும் அருளாளர்களாக அறிவிக்கப்பட உள்ளனர்.

செப்டம்பர் 10, ஞாயிற்றுக்கிழமையன்று போலந்தில் அருளாளர்களாக அறிவிக்கப்பட உள்ள உல்மா குடும்பத்தார், இறைவன் மீது அளவற்ற அன்பும், இரக்கப்பணிகள் செய்வதில் தளரா மனமும் கொண்டவர்கள் என எடுத்துரைக்கின்றார் அருள்பணி ரைட்டல்-அட்ரியானிக்.

மறைசாட்சியாக மரித்த உல்மா குடும்பத்தாரைப் பற்றி தான் எழுதிய புத்தகத்தில் "ஹோலோகாஸ்டின் கொடிய செயலை இவர்களது மரணம் எடுத்துரைததாலும், அன்றாட வாழ்க்கையின் உறுதியான தன்மையில் நற்செய்தியின் ஒளியை சுடர்விடச்செய்தவர்கள் இவர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார் அருள்பணி அட்ரியானிக்.

இரண்டாம் உலகப்போரின் காலத்தில் யூதர்கள் ஜெர்மானியர்களால் அழிக்கப்பட்டு வந்த நேரத்தில் அடைக்கலம் தேடி வந்த யூதர்களுக்கு, தந்தை ஜோசப் உல்மா, தாய் நிறைமாத கர்ப்பிணியான விக்டோரியா, அவர்களின் 6 பிள்ளைகள் உள்ள குடும்பமானது ஆதரவு அளித்த நிலையில் படைவீர்களால் அவர்களது குடும்பம் முழுதும் அழிக்கப்பட்டது.

போலந்தின் மர்க்கோவாவில் வாழ்ந்த இக்குடும்பம் மிகவும் அன்பானவர்களாக, கிறிஸ்தவ பக்தி உடையவர்களாக, எல்லாருக்கும் உதவும் நல்ல சமாரியர்களாகப் போற்றப்பட்ட நிலையில், 8 யூதர்களுக்கு நட்புறவுடன் தங்குமிடம் உணவு போன்றவற்றை அளித்து பாதுகாத்து வந்தனர்.

நாசிசப் படைகளுக்கு இவர்களின் செயல் தெரியவர, தாய் தந்தையர், குழந்தைகளின் முன் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதன்பின் பிள்ளைகள் 6 பேரும் சுட்டுக் கொல்லப பட்டனர். தாயின் வயிற்றில் இருந்த குழந்தை உட்பட உல்மா குடும்பத்தில் மறைசாட்சியாக இறந்த அனைவரும் திருவழிபாட்டு மகிமையில் உயர்த்தப்பட இருக்கின்றனர்.

இளம் உள்ளங்களுக்கு 235



# திருச்சிலுவையின் மகிமை

– திரு B. மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**கிறிஸ்துவர்களின் அடையாளம்:** உமது திரு சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர் என்று இயேசுவின் உடலை சுமந்த திரு சிலுவையே உன்னை ஆராதிக்கிறேன் என்றும் அர்ச்சியசிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே என்ற சிறிய சக்திவாய்ந்த செபத்தை சொல்-யவண்ணம் சிலுவை அடையாளம் வரைந்து செபங்களை ஆரம்பிப்பதும், எந்த ஒரு செயலை துவக்குவதும் ஒவ்வொரு கிறிஸ்துவனும் தன்னை அறியாமலே அனிச்சையாக செய்கின்ற செயலாகும்.

எல்லா கிறிஸ்துவ தேவாலயங்களிலும் மற்றும் நிறுவனங்களிலும் கட்டிடத்தின் வெளிப்புறத்தில் சிலுவை (Cross) அடையாளம் இருக்கும். அது கிறிஸ்துவர்களின் வெளி அடையாளம். உட்புறத்தில்தான் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நிலையில் (Crucifixion) உள்ள சிலுவை இருக்கும்.



**வெற்றியின் சின்னம்:** கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு, சிலுவையில், அரை நிர்வாணக் கோலத்தில் அறையப்பட்ட ஒரு மனிதனின் (இயேசு) உருவத்தை தேவாலயங்களில் காணும்போது அதிர்ச்சியாகவும், புரியாத புதிராகவும் இருக்கும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ரோமானியர்கள் தங்கள் விரோதி களையும், கடும் குற்றவாளிகளையும் சிலுவைகளில் ஆணிகளால் அறைந்து சாகும்வரை தொங்கவிட்டு தண்டித் தார்கள் என்பது சரித்திரம். அதுவரை அவமானத்தின் சின்னமாக தரித்திரத்தின் அடையாளமாகக் கருதப்பட்ட சிலுவை, இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, பாடுபட்டு மரித்து, உயிர்த்த பின்பு வெற்றியின் சின்னமாக மாறியது.

**புனித வெள்ளி:** கிறிஸ்து நாட்காட்டியின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் சிலுவையை மையமாகக் கொண்டு இரண்டு விழாக்கள் கொண்டாடப்படுவதை நாம் அறிவோம். அதில் ஒன்று, தவக்காலத்தின் உச்சக்கட்டமாக பெரிய வெள்ளியன்று இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றதை நினைவுகூறும் வண்ணமாகவும், இயேசுவின் திருப்பாடுகளை தியானிக்கும் வகையிலும் தேவாலயங்களில் சடங்குகள் நடைபெறும். அது மட்டுமல்லாமல் தவக்காலத்தின் ஒவ்வொரு வெள்ளியன்றும் இயேசுவின் துன்பகரமான சிலுவை சுமக்கும் நிகழ்வுகளை தியானிக்கும் வண்ணமாக சிலுவை பாதை பக்தி முயற்சிகள் நடைபெறுகின்றன.

**திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழா:** ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 14-ம் தேதி திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழா உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவிற்கான காரணமாக ஓர் வரலாறு உள்ளது என்பது ஆச்சரியமான உண்மை, ஆவலைத் தூண்டக் கூடியது.

**உண்மை வரலாறு:** என்னை உண்மையாக நேசிப்பவன் என் சிலுவையை சுமந்து கொண்டு என் பின்னே வரவேண்டும் என்று இயேசு கூறியவாறே, இயேசு விண்ணகம் சென்ற பின்னர், இயேசுவை பின்பற்றிய பலரும் பலவித இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு இரத்தம் சிந்தி உயிர் துறந்தனர். யூத நாடெங்கும், ரோம் நகரம் உட்பட பல இடங்களிலும் வேதகலாபனை ஆரம்பித்தது. இந்த குழப்பங்களுக்கு இடையே இயேசு சுமந்து வந்த சிலுவை என்னவாயிற்று என்று யாருக்குமே தெரியவில்லை!

கிறிஸ்துவர்கள் சிந்திய இரத்தம் வீண்போகவில்லை. மூன்றாம் நூற்றாண்டில் ரோம் பேரரசர் கான்ஸ்டாண்டினும் அவர் தாய் ஹெலனாவும் கிறிஸ்தவ மதத்தை தழுவினார்கள். இக்காலகட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இறைத்தூண்டுதலால் ரோம் பேரரசரின் தாய் ஹெலன் கிறிஸ்து பாடுபட்டு மரித்த அந்த அசல் சிலுவையை தேடி கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினார் கி.பி. 326ம் ஆண்டில் எருசலேம் நகரில் இயேசு பாடுபட்டு மரித்த அந்த அசல் சிலுவையை கண்டுபிடித்தார்.

**பாரம்பரியம் கூறுவது:** வரலாற்று சான்றுகளின் கல்வாரி மலைப்பகுதியில் மூன்று சிலுவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் இயேசு பாடுபட்ட சிலுவை எது என்று கண்டறிய வேண்டிய சூழ்நிலை. ஏனெனில் இயேசுவோடு சேர்த்து இரு கள்வர்களும் சிலுவை சாவுக்கு கையளிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில், குணப்படுத்த முடியாது என்று கைவிடப்பட்ட ஒரு நோயாளி பெண்மணியின் மீது இயேசுவின் சிலுவை வைக்கப்பட்டபோது அவரது நோய் நீங்கியது என்பது பாரம்பரிய கூற்று. இது நிகழ்ந்தது கி.பி.328 ம் ஆண்டு.

**செப்டம்பர் 14:** திருசிலுவை கண்டுபிடிக்கப்பட்டதை கொண்டாடும் விதமாக சிலுவை கண்டுபிடிக்கப்பட்ட பகுதியில் தேவாலயங்களை நிர்மாணிக்குமாறு பேரரசர் காண்ஸ்டாண்டின் உத்தரவிட்டார். திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழா முதன் முதலாக எருசலேம் தேவாலயத்தி-ருந்து தொடங்கியது. கொல்கோத்தா கட்டப்பட்டு கான்ஸ்டாண்டின் பேரரசரால் அர்ப்பணிக்கப்பட்ட பசி-க்கா தேவாலயத்தில் கி.பி. 335ம் ஆண்டு செப்டம்பர் 14ம் நாள் தொடங்கியது. எருசலேம் தொடங்கி மற்ற இடங்களிலும் பரவி கி.பி 720 முதல் செப்டம்பர் 14 திருச்சிலுவை உயர்த்தப்பட்ட விழாவாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

இறைவனின் மீட்பு திட்டத்தின் மூலம், காட்டு மிராண்டித்தனமாக சித்திரவதை சாவுக்கு பயன்படுத்திய அவமான சிலுவையை, தெய்வீக, வாழ்வளிக்கும் மரமாகவும், மனிதக்குலத்திற்கு நம்பிக்கையளிப்பதுமாகிய வெற்றியின் சிலுவை உயர்த்தபட்ட நாள்தான் செப்டம்பர் 14. இந்த சிலுவை மகிமையின் சிலுவை; மனித குலத்தை மீட்ட சிலுவை.



# ஆன்மீகக் கடமை

- திரு. அல்போன்ஸ் மோசஸ்
புதுச்சேரி-9.

துறவி ஒருவர் அந்த ஊருக்கு வந்திருந்தார். அவரிடம் வந்த இளைஞன் ஒருவன் சாமி எனக்கு ஒரு சந்தேகம். உங்களைப் போன்ற பல ஞானிகளும் பெரியோர்களும் வந்து மனித குலத்திற்கு பலப்பல அறிவுரைகளைச் சொல்லிச் சென்றுள்ளனர். ஆனால் இன்னும் மனிதன் திருந்திய மாதிரித் தெரியவில்லை. தன் வழியிலேயேத்தான் செல்கின்றான். உங்களைப் போன்றவர்களின் அறிவுரைகளால் என்ன பயன் என்று கேட்டான்.

துறவி அவனிடம் தம்பி நான் இன்னும் ஒரு சில நாட்கள் இங்கே தங்கி இருப்பேன். நான் இந்த ஊரைவிட்டுச் செல்லும் போது நீ கேட்ட கேள்விக்கு பதில் கட்டாயம் சொல்கிறேன். அதற்கு முன் ஒரு வேலை செய். ஒரு குதிரையைக் கொண்டு வந்து இந்த கோயில் மண்டபத்தில் கட்டி வை. நான் ஊரைவிட்டுச் செல்லும் வரை குதிரை அங்கேயே கட்டி இருக்கட்டும். தினமும் இரவு உணவு வைத்துவிடு என்று சொல்லிவிட்டு அருகில் உள்ள சத்திரத்திற்குச் சென்றுவிட்டார்.

மறுநாள் காலை துறவி அந்த கோவில் மண்டபத்திற்கு வந்தார். அப்பொழுது அந்த இளைஞன் அந்த குதிரையைச் சுற்றி இருந்த சாணத்தையும் அது மிச்சம் வைத்திருந்த உணவுகுப்பைகளையும் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தான். இவ்வாறு நான்கு நாட்கள் தொடர்ந்து நடந்தது.

அடுத்த நாள் காலை சுத்தப்படுத்திக் கொண்டிருந்த இளைஞன் அருகில் துறவி வந்து இன்று சுத்தப்படுத்தினாலும் இந்த இடத்தை குதிரை மீண்டும் மீண்டும் அசுத்தம் செய்து விடுகின்றதே பிறகு ஏன் தேவை இல்லாமல் சுத்தம் செய்கிறாய் என்று கேட்டார்.

அதற்கு அவன் என்ன சாமி எல்லாம் தெரிஞ்ச நீங்கள் இப்படி கேட்கறிங்களே. திரும்ப திரும்ப அசுத்தம் ஆவுது. சுத்தப்படுத்தாம இருக்க முடியுமா? என்றான்.

இதைக் கேள்விப்பட்ட துறவி தம்பி அன்று நீ என்னிடம் கேட்ட கேள்விக்கு இதுதான் சரியான பதில். நீ இப்போது செய்யும் வேலையைத்தான் நானும் செய்கிறேன். அசுத்தமான இடத்தை நீ மீண்டும் மீண்டும் சுத்தம் செய்வதுபோல மனிதர்களை நல்வழிபடுத்தும் செயலை பெரியோர்கள் இடைவிடாமல் செய்து வருகின்றார்கள் என்றார்.

சாமி இதற்கு நிரத்தர தீர்வு ஏதாவது உண்டா என்று கேட்டான் இளைஞன் அதற்குத் துறவி உடனே அங்கு கட்டிஇருக்கும் குதிரையை அவிழ்த்துவிட்டு விரட்டினார். பின்னர் அந்த இளைஞனைப் பார்த்து இனி இங்கு அசுத்தம் ஆகுமா என்று கேட்டார். ஆகாது சாமி என்றான் இளைஞன்

உன் கேள்விக்கு இதுதான் பதில் நீ செய்த வேலையைப் போல நாங்கள் மீண்டும் மீண்டும் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். எப்போது மனிதன் தன்னிடம் இருக்கும் தீய எண்ணங்கள் என்ற குதிரையை விரட்டி விடுகின்றார்களோ அப்பொழுதுதான் எங்களின் சுத்தப்படுத்தும் கடமை முடிந்துவிடும் அன்றுவரை மனிதனை நன்நெறிபடுத்துவது ஆன்மீகத்தின் கடமை என்றார் துறவி.நாமும் நம்மிடமுள்ள தீயபழக்க வழக்கங்களை வேரோடு களைவோம். வேதனையின்றி வாழ்வோம்.



# தன்னையறிந்தின்பமுற...

திரு. ஜெயராஜ் தானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3

ரமண மகரிஷி அவர்கள் 'நான் யார்?' என்ற கேள்வியை மனதிலிறுத்தி அதற்கு விடைகாண முயன்றார். சாக்ரடீஸ் என்ற கிரேக்க அறிஞர் 'உன்னையே நீ அறிவாய்' என்ற தத்துவத்தை முன்மொழிந்த காலத்திலிருந்து இந்தக் கேள்வி மனிதனைப் பாடாய் படுத்தி வருகிறது. வள்ளலாரும் "தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே, ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே" என்று வெண்ணிலாவை உருவகப் படுத்தி இறைவனை வேண்டுகிறார்.

மேலே சொன்ன மூன்று கருத்துகளும் நண்பர் பாஸ்கரனிடம் பேசிக் கொண்டிருந்தபோது கிடைத்தவை. அவர் சென்ற பிறகு அவற்றை அசைபோட்டேன். அப்பொழுது, E.N. டக்கர் (E.N. Ducker) என்பவர் பகிர்ந்த உண்மைச் சம்பவம் ஒன்று என் நினைவில் பொறி தட்டியது. அந்தச் சம்பவம் இது தான் -

"ஒரு பெண் கனவு கண்டாள். அவளிடம் ஒரு பழைய அலமாரி இருந்தது. அதைப் பயனற்றதுஎன்றுகருதியதால், ஒரு வியாபாரியிடம் எடுத்துச் சென்றாள். அதற்கு விலையாக அவர் அவளுக்கு பத்தாயிரம் டாலர்களைக் கொடுத்தார்.

பின்னர், அந்த வியாபாரி ஒரு உப்புத்தாளை எடுத்து, அந்த அலமாரியின் மீதிருந்த வண்ணப்பூச்சைத் தேய்த்தார். அதன் அடியில் தங்கம் இருந்தது.

பணத்தைப் பெற்றஅந்தப் பெண் அலமாரியைக் கொடுத்தவரைக் கண்டுபிடிக்கமுயன்றாள்.முடியவில்லை."

கனவின் பொருளை E.N. டக்கர் பின்வருமாறு விளக்குகிறார்:

"அலமாரி அந்தப் பெண்ணைக் குறிக்கிறது. அவள் 'தன்னை' சில காசுகள் மட்டுமே மதிப்புள்ளவராக கருதியதால் அவள் 'அதை' விரும்பவில்லை. அந்த வியாபாரி வேறு யாருமல்ல –நமது ஆண்டவர் தான். உண்மையான மதிப்பை, தங்கத்தின் அடிப்படையில், பொக்கிஷமாகப் பாரக்கிறார் நமதாண்டவர். தங்கத்தை மூடியிருந்த மெல்லிய வண்ணப்பூச்சு அவளது வாழ்க்கை அணுகுமுறையாகும். பிறரிடத்திலே நன்மதிப்பு பெறவும், போலி கௌரவத்திற்காகவும் படாடோப வாழ்ந்து கொண்டிருந்தாள். அவளுடைய உண்மையானமதிப்புபத்தாயிரம் டாலர்கள். அதை இறைவன் அவள் மீதுவைத்தார். ஆனால், அவள் இறைவன் தன் மீது வைத்திருக்கும் மதிப்பை உணரவில்லை. அந்த வியாபாரியைக் கண்டுபிடிக்க முயன்றாள். ஆனால், அவர் போய்விட்டார். இருப்பினும், இறைவன் அவள் மீது வைத்த மதிப்பை அவள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது."

இந்தக் கனவு பற்றி நண்பர் பாஸ்கரனிடம் கைப்பேசியில் தெரிவித்தபோது, அவர் திருவிவிலியத்தில் எபேசியர் முதல் மற்றும் மூன்றாம் அதிகாரங்களை வாசிக்கச் சொன்னார். வாசித்தில் எனக்குக் கிடைத்தது–" நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும் நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுளுக்கே திருச்சபையில் கிறிஸ்து இயேசு வழியாக தலைமுறை தலைமுறையாக என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்." (எபேசியர் 3:20).



## புனிதப் பெருமகள்

(புனித அல்போன்சாவின் அற்புத வரலாறு)

- Dr. தீபக் தாமஸ்,
பல் மருத்துவர், புதுவை.



அன்னாவை
அன்பின் மிகுதியால்
அன்னக்குட்டி என்று
அழைத்தனர் அனைவரும்.

தன் பால்யத்தை
பெரியன்னையின்
ஊரான
முட்டுச்சிறாவில் பழகினாள்
அன்னக்குட்டி.

பெரியன்னை உண்மையிலேயே
பெரிய அன்னைதான்
அன்னக்குட்டிக்கு.

தன்
மகன்களை விட
தங்கையின் மகளுக்கு
அதிக பாசம் காட்டினாள்
அன்னம்மாள்.

பொன்னான குழந்தைக்கு
பொன் நகை பல பூட்டி பூரித்தாள்.

பெரியன்னை போலவே
பெரியப்பனும் அவளிடம்
பெரும்பாசம் கொண்டிருந்தான்.

அன்னம்மாள்
எத்தனை அளவு கனிவு கொண்டவளோ
அத்தனை அளவு கண்டிப்பும் கொண்டவள்.
கவனம் மிக கொண்டவளாய்
கருத்துடன் அவளை
வளர்த்து வந்தாள்.

அருமை மகளை காணாது
அகம் கொள்ளாது
அப்பன் சூசைக்கு
அடிக்கடி வருவான்.
அள்ளி கொஞ்சுவான்.
அழைத்துச் சென்றும்
கொஞ்சுவான்.

அன்னக்குட்டியின்
அக்காளுகளுக்கும்
அவ்வளவு ஆசை
அவள் மீது.

பிரிய மனமில்லாவிடினும்
பெரியன்னையிடமே
திரும்ப வந்து
விட்டுச் செல்வான்.

→ தொடரும்...



## தெய்வத்தைக் கண்டேன்!

கவிஞர் நெஞ்சத்தரசு
மேடவாக்கம், சென்னை.

அதோ
அந்தச் சிமெண்டு இருக்கையில்
அமர்ந்திருக்கும் பாலகனை,
ஆர்வமுடன் பார்க்கிறேன்!



தெய்வம் போலத் தரிசனம் தரும்
பாலகனை – மேலும், மேலும்,
ஆர்வமுடன் பார்க்கிறேன்!

வயிற்றுப் பசிக்குப்,
பிறகு, பிச்சை எடுக்கலாம்
என்று நினைத்தபடி,
வீதியோரத்தில் நின்றபடி,
அந்தப் பாலகனையே பார்க்கிறேன்!

வீதியின் குப்பைக் கூளங்களைப்
பெருக்கித்தள்ளிப் பணியாற்றும்
பெண்களில் ஒருத்தியைப்
பார்த்துக் கொண்டே யிருக்கிறான்
அந்தப் பாலகன்!

அவ்வப்போது – அவனது
அரும்பிதழ்கள் சிரிக்கின்றன!
அம்மா! என்று அழைக்கின்றன!
அழகியக் கரங்கள் உயர்ந்து
அன்புடன் அசைகின்றன!

அம்மாவும்,
வீதியைப் பெருக்கியபடியே
பாலகனைப் பார்த்துச் சிரிக்கிறாள்...
கையை அசைக்கிறாள்!

அம்மாவின் கண்களில் மின்னும்
அன்பின் அர்த்தம் – அந்தப்
பாலகனுக்கு மட்டுமே தெரியும்!

அந்தப் பாலகனின் தலையில், முகத்தில்
கண்களில், கைகளில், கால்களில்
அழுக்குகள் தெரியலாம்!... எனினும்
அவைகள் எனக்கு – அழகுகளின் தொகுப்பு.

பாலகனின் மனத்தில்
அன்பின் அழகே இருக்கிறது
அதுவே அவனுடைய அழுக்கு முகத்தில்
பளிச்சென தெரிகிறது!

அதனால்தான், பாலகனால்,
அம்மாவை உற்றுப் பார்த்துச்
சிரிக்கவும், கைகளை அசைக்கவும்
அம்மா என்று
அன்புடன் அழைக்கவும் முடிகிறது!

பாலகன் இன்னும் – தன்
அம்மாவையே பார்க்கிறான்!
இந்தப் பிச்சைக்காரக் கிழவனோ,
அந்தப் பாலகனையே பார்க்கிறேன்!

இன்று – வீதியில் தெய்வத்தைக் கண்டேன்!
அதற்கு – இந்தக் கிழவனின்
சுருங்கயம் கண்களே சாட்சி!

## 23-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்.
- திபா 23.6

**இதை காணும் அனைவரும் அன்னாரின் ஆன்மா நித்திய பேரின்ப வான்வீட்டில் முடிவில்லா பிரகாசமும் அருளாசியும் பெற்றிட வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனிடம் ஜெபிக்க வேண்டுகிறோம்.**

**1கர்.1மங்.1திரி.**

15-09-2023 வெள்ளி காலை 6.00 மணிக்கு திருப்பாப்பு-யூர் கம்மியம்பேட்டை, புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

**திரு. M. ஏகாம்பரம் அருள்நாதன்,** M.A.,B.Ed

**(தலைமை ஆசிரியர் ஓய்வு)**

**தோற்றம்: 4-5-1938**

**மறைவு: 15-9-2000**

**பிரிவால் துயருறும்**

**மனைவி, மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**

---

**நினைவு அஞ்சலி**　**விண்ணக வாழ்வின் 5-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

**பிறப்பு : 03-12-1934**
**இறப்பு: 25-03-2007**



**பிறப்பு : 05-12-1943**
**இறப்பு: 13-09-2018**

**திரு.S.அந்தோனிராஜ்,** **திருமதி.A.பெர்னெதெத் அம்மாள்**

தலைமை ஆசிரியர் (ஓய்வு) M.A.M.Ed,B.G.L.

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வர்" - யோவான் 11:25

திரு. S.அந்தோனிராஜ் தலைமை ஆசிரியர், இவரது மனைவி திருமதி A.பெர்னெதெத் அம்மாள் ஆகியோரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 13-09-2023 புதன்கிழமை காலை 6.30 மணிக்கு மதுராந்தகம், புனித அந்தோணியார் ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள் மற்றும் பேரக்குழந்தைகள்.**

மதுராந்தகம்.

---

## ஊக்கமும் நம்பிக்கையும் தரும் இடமாகக் கருணை இல்லம்

வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களை வரவேற்கும் இல்லமான இக்கருணை இல்லத்தினை திறந்து வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை இல்லத்தின் இயக்குனரான அருள்சகோதரர் Andrew Tran Le Phuong அவர்கள் வரவேற்றார். அதன் பின் இல்ல இயக்குனர் அவர்களின் வாழ்த்துரையுடன் கூட்டம் ஆரம்பமானது.

சமூகத்தின் விளிம்பில் வாழ்பவர்களான ஏழைகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், பெண்கள், குழந்தைகள், புலம்பெயர்ந்தோர் அனைவரும் ஒவ்வொரு நாளும் இக்கருணை இல்லத்தில் வரவேற்கப் படுகிறார்கள் என்றும், உலகத்தால் நிராகரிக்கப்படும் இவர்களுக்கு உணவு, சுத்தமான ஆடைகள் வழங்கப்படுகின்றன என்று கூறிய ஆண்ட்ரூ அவர்கள், எல்லாவற்றிற்கும் மேலாக யார் வந்து கதவைத் தட்டினாலும் பேசுவதற்கு செவிமடுப்பதற்கு ஒருவர் இருக்கும் இல்லமாக கருணை இல்லம் செயல்படுவதை எடுத்துக்காட்டினார். வீடற்றவர்களுக்கான முதலுதவி மையமாகவும் பாதிக்கப்பட்டவர் களுக்கு ஊக்கமும் நம்பிக்கையும் தரும் இடமாகக் கருணை இல்லம் திகழ்வதையும் சுட்டிக்காட்டினார் இயக்குனர் ஆன்ட்ரூ.

சமூக நீதி, தேவைப்படுபவர்களுக்கு உதவுதல் ஆகிய துறைகளில் செயல்படும் தலத்திருஅவையின் அனைத்து நிறுவனங் களும் ஒன்றிணைந்து ஒரு மையத்தை உருவாக்க வேண்டும் என்னும் கர்தினால் ஜோர்ஜோ மரேங்கோ அவர்களின் யோசனையே இக்கருணை இல்லம் என்றும் எடுத்துரைத்தார் காசா தெல்லா மிசரிகோர்தியா என்னும் கருணை இல்லத்தின் இயக்குனர் ஆன்ட்ரூ.

### அருட்சகோதரி வெரோணிக்கா அவர்களின் உரை

மங்கோலியாவில் உள்ள புனித அன்னை மரியா மருத்துவமனையில் பணியாற்றும் சார்ட்ரசின் புனித பவுல் சபை அருள்சகோதரி வெரோணிக்கா கூறுகையில், ஆண்டிற்கு 12,000 பேர் உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெறுகின்றனர் என எடுத்துரைத்து தனது 8 ஆண்டுகால பணியில் மகிழ்வுடன் ஏழைகளோடு ஏழையாகப் பணியாற்றி வருவதையும் எடுத்துரைத்தார். வீடற்ற மக்களுக்கு இலவச காலை உணவினையும் அடிப்படைப் பொருட்களையும் வழங்கி வருவதை எடுத்துரைத்த அருள்சகோதரி அவர்கள் ஏழை மக்களுக்குப் பணியாற்றும் போது தன்னை அவர்களை விட ஏழையாகப் பார்ப்பதாகவும் எடுத்துரைத்து மாறிவரும் உலகின் எதிர்மறைத் தாக்கங்களிலிருந்து ஆறுதலையும் பாதுகாப்பையும் தான் கண்டு கொண்டதாகக் கூறினார்.

## இறைவனில் இணைந்த

### 28 ஆம் ஆண்டு நினைவு

தோற்றம்:18-08-1921



மறைவு: 23-09-1995

**திரு.C.அன்டோனி**

(Rtd.J.E.Electricity Dept, Pdy)

### 17 ஆம் ஆண்டு நினைவு

தோற்றம்:02-11-1928



மறைவு: 13-09-2006

**திருமதி.A.மரி தெரேஸ் சுசான்**

காலங்கள் போகின்றன நாட்கள் நகர்கின்றன. நிமிடங்கள் ஊர்கின்றன. ஆனால் உங்கள் நினைவுகள் மட்டும் அப்படியே நெஞ்சத்தில் நிழலாடிக் கொண்டு இருக்கின்றன.

மேற்கில் சூரியன் மறைவது மீண்டும் உதித்திடவே மலர்கள் மலர்ந்து உதிர்வது விதையாகி மீண்டும் மலர்வதற்கே! உதிர்ந்த மலராய்-நீங்கள் மீண்டும் மலர்வீர்கள் என்ற நம்பிக்கையில் என்றும் நாங்கள்.

*என்றும் உங்கள் நினைவுகளோடு*

Fr. A.S.P. **அகஸ்டின்,** Manager, Mission Press,Pondy.

A. **எக்ஸ்படிட்,** Rtd. Superintendent, Govt. of Pondicherry.

Er.A. **ஜெசிந்தா,** Rtd. PWD, Pondy. - பேரன்: E. **பெனடிக்ட்**

23-9-2023 காலை 6.30 மணிக்கு புதுவை, ஒஸ்பீஸ் மடத்து சிற்றாலயத்தில் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்ப- நிறைவேற்றப்படும்.

13-9-2023 காலை 6.30 மணிக்கு புதுவை, ஒஸ்பீஸ் மடத்து சிற்றாலயத்தில் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்ப- நிறைவேற்றப்படும்.

---

## விண்ணக வாழ்வின்

### 10-ம் ஆண்டு நினைவு

தோற்றம்:02-05-1954



மறைவு: 17-09-2013

**திருமதி. K.ஜெசிந்தா,**

ஆசிரியை

"நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே; நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே!" (பிலி 1:21)

**திருப்ப-**

**17-09-2023, ஞாயிறு மாலை 6.00 மணிக்கு செல்-யம்பட்டி, தருமபுரி புனித சவேரியார் ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.**

என்றும் உன் அன்பில் வாழும்

கணவர்: **ஆ. மரியசெல்வம்**

பிள்ளைகள், உடன் பிறந்தோர்,

மருமகன்கள், மருமகள்,

மற்றும் பேரப்பிள்ளைகள்.

---

## விண்ணக வாழ்வின் 3-ஆம் ஆண்டு நினைவு அஞ்ச-

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11:25). திருச்சிலுவை மகிமை திருவிழா அன்று மரித்த உத்தமர், விண்ணிலிருந்து தொடர்ந்து எம்மை வழிநடத்தும்

தோற்றம்: 07-06-1962



மறைவு: 13-09-2020

காரைக்கால் சுதந்திரப் போராட்ட தியாகியும் பிரபல பிரெஞ்சு வழக்கறிஞருமான லெயோன் சேன் மூான் அவர்களின் பேரனும் புதுவை கல்வித்துறை முன்னாள் இணை இயக்குநர் (லேட்) ஜான் லூயிஸ் மதாம் ரீத்தா தம்பதியினரின் ஏக புதல்வனுமாகிய

**Mr. J. ANTONY VIVEKANAND, B.Tech.,**

(Assistant Executive Engineer, Electricity Department, Puducherry)

### ஜெபம்

இரக்கம் நிறைந்த இறைவா! ஆத்துமங்களை இரட்சிக்கிறவரே, உமது அன்பில் மூழ்கி இளைப்பாறுவதற்காக இம்மண்ணுலகிலிருந்து உம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காக வாழ்ந்த உமது அடியார் அவர்களின் ஆத்துமம் முடிவில்லா பேரின்ப வீட்டில் துயில்கொள்ள செய்தருளும். - ஆமென். - கர்.மங்.திரி.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 13-09-2023 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை, இரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில் நடைபெறும் திருப்பலியில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா இறைவனில் இளைப்பாற வேண்டி மன்றாடும்

மனைவி: **SYLPHIA SARALA**

(Govt. French Teacher)

மகன் **: Dr. JUDE ERNEST DILEEP,**

M.D., D.N.B (DVL)

Assistant Professor, AVMCH, Puducherry

மருமகள் **: Dr. SONIA DORATHY,** MBBS

மாமனார் **: Mr. CLEMENT ESWAR**

(Rtd. SAO, Nehru Nagar, Puducherry)

**மற்றும் உறவினர்கள்,**

**நண்பர்கள்.**

---

## விண்ணக வாழ்வின்

### 12-ம் ஆண்டு நினைவு

தோற்றம்:26-12-1971



மறைவு: 14-09-2011

**திரு.ம.இம்மானுவேல் ஜோசப்**

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்" (எசா. 62:3)

**திருப்ப- நாள்: 14-09-2023, வியாழன்**

**நேரம் : காலை 6.00 மணிக்கு**

**இடம் : ஆரோக்கிய அன்னை ஆலயம், அரியாங்குப்பம், புதுச்சேரி.**

இவரது ஆன்மா விண்ணகப் பேரின்ப வான்வீட்டில் முடிவில்லாதப் பிரகாசமும் அமைதியும், அருளும் பெற்றிட செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் வாடும்...

அன்பு மனைவி: **A. மார்கிரேட்**

அன்பு மகள்: **E.** டானியா பிரான்சி

பெற்றோர், சகோதரர் மற்றும் உறவினர்கள்.

## டாக்டர் கலாம் இதைச் செய்தார்

அப்துல் கலாம் விஞ்ஞானியாக இருந்தபோது மிகத் தீவிரமாகப் பணி ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. இப்பணியில் 70 விஞ்ஞானிகள் ஈடுபட்டுக் கொண்டிருந் தனர். அவர்களில் ஒருவர் அப்துல் கலாமிடம் வந்து தனது குழந்தைகளைக் கண்காட்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருப்பதால் மாலை 5 மணிக்கு வீட்டிற்குச் செல்ல தன்னை அனுமதிக்குமாறு வேண்டினார். கலாமும் அவருக்கு அனுமதி அளித்தார். ஆனால், அந்த விஞ்ஞானி தனது பணியை மிகுந்த ஈடுபாட்டுடன் செய்து கொண்டிருந்ததால் மாலை 5 மணிக்குப் போகவேண்டும் என்பதையே மறந்துவிட்டார். பணி முடிந்து அவர் நேரத்தைப் பார்த்தபோது இரவு 8.30 மணி ஆகியிருந்தது. அப்போது அவர் தனது தலைவர் கலாம் அவர்களைத் தேடினார். ஆனால், அவர் அங்கு இல்லை.

தனது குழந்தைகளின் ஆசையை நிறைவேற்ற முடியவில்லையே என்ற குற்ற உணர்வுடன் தனது வீடு திரும்பினார் அந்த விஞ்ஞானி ஆனால், வீட்டில் குழந்தைகளைக் காணவில்லை. உடனே, “நமது குழந்தைகள் எங்கே?” என்று தனது மனைவியிடம் கேட்டார். அதற்கு அவர், “உங்களுக்குத் தெரியாதா? ஒரு இளம் மேலாளர் மாலை 5.15 மணிக்கு வந்து நமது குழந்தைகளைக் கண்காட்சிக்கு அழைத்துச் சென்றுவிட்டார்” என்று சொன்னார்.

அலுவலகத்தில் அந்த விஞ்ஞானி மாலை 5 மணியளவில் தனது பணியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதைக் கண்டகலாம் நிச்சயமாக இவர் வீட்டிற்குச் சென்று அவர் குழந்தைகளைக் கண்காட்சிக்கு அழைத்துச் செல்லமாட்டார் என்பதை அறிந்து தானே அவரது வீட்டிற்குச் சென்று இந்தக் காரியத்தை செய்தார். அந்தக் குழந்தைகளுக்கு நிறைந்த மகிழ்ச்சியை அளித்தார்.

அப்துல் கலாம் இந்திய நாட்டின் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்ட உடன் கேரளாவில் உள்ள திருவனந்தபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக வந்திருந்தார். அப்போது யாரையாவது இரண்டு பேரைத் தன்னோடு விருந்திற்கு அழைத்துச் செல்லும் அதிகாரம் அவருக்கு இருந்தது. கலாம் யாரை அழைத்திருப்பார் என உங்களால் யூகிக்க முடிகிறதா? ஒருவர் சாலையோரம் செருப்புத் தைப்பவர். இன்னொருவர் ஒரு சிறிய உணவகத்தை நடத்தி வந்தவர்.

கலாம் ஒரு அறிவியல் விஞ்ஞானியாக முக்கியமான நேரங்களை திருவனந்தபுரத்தில் செலவிட்டார். அப்போதுதான் அவர் இந்த மறக்க முடியாத காரியத்தைச் செய்தார். விருந்தின்போது அவர்களோடு மகிழ்ந்து விருந்துண்டார். இந்தியாவில் எந்த அரசியல்வாதியும் இந்த நல்ல காரியத்தை செய்திருக்க முடியாது.

அன்புப் பிள்ளைகளே, சுலாமை பார்த்தீர்களா..? எவ்வளவு மனித நேயத்தோடு வாழ்ந்திருக்கிறார். அதுபோல நீங்கள் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் உங்களுக்குக் கீழே உள்ளவர்களை நேசியுங்கள். அவர்களிடம் அன்பு பாராட்டுங்கள். அவர்களுக்கு உங்களால் முடிந்த உதவியை செய்யுங்கள்.

## எல்லாமே ஆச்சரியம்தான்!

இவ்வுலகில் ஆச்சரியங்கள் அதிகம் இருந்தாலும் மனிதன் அதனை அறியாதவன் போல செயல்படுவது கூட ஆச்சரியமே.

**இறைவன்:** படைத்தவன் இறைவன். ஒரே கடவுள் என்பதை மனமுவந்து ஏற்றுக் கொள்ளும் மனிதன் அவரைத்தவிர வேறு எவருக்கோ வணக்கம் செலுத்துவதோ – ஆச்சரியமே!

**மோகம்:** இந்த உலகில் நாம் காணும் பொருட்கள் அனைத்துமே அழிந்துப்போகும். இதை அறிந்த மனிதன், அந்த பொருட்கள் மீது கொள்ளும் மோகம். அதை பெற துடிக்கும் மனநிலை – ஆச்சரியமே!

**கவலை:** எந்த செயல்பாடும் இறைவனின் சித்தப்படியே நடக்கும் என்பதை அறிந்த பின்னும், இழந்தவற்றை எண்ணி கவலை கொள்வது கூட – ஆச்சரியமே!

**மரணம்:** இறப்பிற்கு பின் இறைவனில் வாழும் வாழ்வு பற்றி அறிந்த மனிதன் – இவ்வுலகில் வாழும் பொழுதுகூட மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பிருந்தும் அதனைப் பற்றி அக்கறையின்றி வாழ்ந்துக் கொண்டிருப்பது – ஆச்சரியமே!

**மறுவாழ்வு:** நிச்சயிக்கப்பட்டது. என்றோ ஒருநாள் நிகழும் என்பது தெரிந்தும், எதைபற்றியும் கவலையின்றி, தன் மனம் போன போக்கில் வாழும் மனிதம் – ஆச்சரியமே!

**நிலையான செல்வம்:** விண்ணரசின் விழுமியங்களை அறிந்த மனிதன் புண்ணயங்களை தேடாமல், அழியும் உலக செல்வங்களை சேர்த்து வைப்பதில் தனது முழு வாழ்வையும் அர்ப்பணிப்பது – ஆச்சரியமே!

**தீர்ப்பு:** நரகம், தண்டனை, வேதனை அது பற்றி அறிந்திருந்தும் தொடர்ந்து பாவம், தவறுகள், நெறி தவறிய வாழ்க்கை முறை, அறமற்ற வாழ்க்கை வாழ்வது கூட – ஆச்சரியமே!

**சுயநலம்:** பொது நலன் மீது அக்கறையின்றி தன் சொந்த நலனில் அக்கறை கொண்டவராய் வாழ்வது தவறு என அறிந்தும், மனமாறாமல் தன்னை ஞாயப்படுத்திக் கொண்டு வாழ்வது – ஆச்சரியமே!

இவை எதெல்லாம் நமக்கு பொருத்தமாய் உள்ளது என இன்னமும் கூட சுயபரிசோதனை செய்யாமல் இருப்பதுகூட – ஆச்சரியமே!

**இலவச இணைப்பு:** இன்னமும் அரசாங்கம் கணவன்–மனைவி இவர்களின் **ஆதார்** ஐ இணைக்க கட்டாயபடுத்தாமல் இருப்பதும் – ஆச்சரியமே!

- மௌனகுரு

**Published and Printed by Rev. Fr. A.S.P. AUGUSTE on behalf of Most Rev. Dr. FRANCIS KALIST,**
Archbishop of Pondicherry - Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Rev.Fr.A.S.P.Auguste. Manager : Rev.Fr.A.S.P.Auguste.